R 4018 (page 198) [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

# எஸ்தர் புஸ்தகத்திலுள்ள நிழல்கள்

அன்புக்குரிய சகோதரர் ரசல் அவர்களே:-

எனது யோசனைகளைத் தெரிவிக்க அனுமதியுங்கள்: ***அகாஸ்வேரு*** எனும் பெயரின் அர்த்தம், "இராஜா" ஆகும்; இவர் "சூரியனுக்கு," கிறிஸ்துவுக்கு நிழலாகக் காணப்படுகின்றார்; விருந்துக்கு அழைக்கப்பட்டு, ஆனால் வராமல் காணப்பட்டவர்களுக்கு "***வஸ்தி***" நிழலாகக் காணப்படுகின்றாள்; "சுக்கிரன் கிரகம்" என்று அர்த்தப்படும் ***எஸ்தர்***, கிறிஸ்துவின் மணவாட்டிக்கு நிழலாகக் காணப்படுகின்றாள் (சுக்கிரன் நமது கிரகங்களிலேயே மிகவும் மகிமையானதாகக் காணப்பட்டு, சூரியனுடைய கதிர்களை அதிகமாய்ப் பிரதிபலிக்கக்கூடிய ஒன்றாகும்); "செவ்வாய் கிரகத்திற்கு அர்ப்பணிப்பு" எனும் அர்த்தங்கொள்ளும் யூதனாகிய ***மொர்தெகாய்***, முற்பிதாக்களுக்கு நிழலாய் இருக்கின்றார். (செவ்வாய் கிரகம் மற்ற கோள்களைவிட, பூமிக்கு அருகாமையில் உள்ளது என்றும், பூமிக்கும், சூரியனுக்கும் இடையில் காணப்படுகின்றது என்றும் நான் நம்புகின்றேன்). இறுதியாக வேதவாக்கியங்களில் கடைசி அமலேக்கியன் என்று குறிப்பிடப்பட்டிருக்கும் ஆகாகியனான ***ஆமான்***, ஆயிர வருஷ யுகத்தின் முடிவில், முற்பிதாக்களின் கரங்களிலிருந்து வல்லமையை எடுக்க முயற்சிக்கும் வகுப்பாருக்கு நிழலாகக் காணப்படுகின்றார். தயவுகூர்ந்து, எஸ்தர் இராஜாத்தியின் சம்பவத்தைக் கூர்ந்துகவனித்து, இந்த நிழல் எவ்வளவு துல்லியமாய்ப் பொருந்துகின்றது என்று பாருங்கள். ஒருவேளை இந்த நிழலின் அர்த்தத்திற்கான இவ்விளக்கம் சரியாக இருக்குமானால், மொர்தெகாய் எனும் பெயரின் அர்த்தம் உங்களது சமீபகால கருத்திற்கு இசைவான ஒரு காரியமாகக் காணப்படும்; அதாவது ஆயிர வருஷ யுகத்தினுடைய முடிவிற்குப் பிற்பாடு, முற்பிதாக்கள் பரம கனங்களையும், நிலைகளையும் அடைவார்கள் என்ற உங்களது சமீபகால கருத்திற்கு இசைவாகக் காணப்படும்.

கிறிஸ்துவுக்குள்ளான உங்கள் சகோதரன்,

Clayton. J. Woodworth.

---------------------